[illegible]

- [illegible] ([illegible]) [illegible] “[illegible]” [illegible] ‘[illegible]’ [illegible]. [illegible] ‘[illegible]’ [illegible] - ஆசிரியர், பதிவுகள் -

காலத்தால் சாலப் பழமையுடைய நம் செம்மொழியாம் அருமைத் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்து சீரிளமைத் திறத்தோடு விளங்குகின்றது. அறிவியல் நுட்பங்களைத் தன்னகத்தே உள்வாங்கி மாறிவரும் உலக சூழலுக்கேற்ப தகவல் தொடர்பு மின்னணுச் சாதனங்கள் மற்றும் கணினி இணைய வலைத்தளங்கள் ஊடாக தேவைக்கேற்ப பரிணாம வளர்ச்சி பெறும் தன்மையானது ஒரு மொழியின் நிலைத்த தன்மைக்கு இன்றியமையாததாகும். அந்த வகையில் இந்த பாரினுள் கிட்டத்தட்ட 80 மில்லியன் மக்களால் பேசப்பட்டு வரும் தலைசிறந்த கலை இலக்கிய அறிவுப் பெட்டகமாகத் திகழும் எமது தமிழ் மொழியை இன்றைய கணினி யுகத்திலே கணினிச் சுதேசிகள் Digital Natives என்றழைக்கப்படும் எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு இட்டுச் செல்வது நாம் நமது மொழிக்குச் செய்யும் பாரிய தொண்டாகும். இதை மையப்படுத்தி இந்த ஆய்வுக் கட்டுரையிலே தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், சீரிய வாழ்க்கைக்கு அடித்தளமிடும் வாழ்க்கை நெறிகளுக்கும் பழமொழிகள் வழங்கும் பங்களிப்பு யாது என்பது ஆராயப்படுவதோடு மட்டுமல்லாமல் அவற்றை மின் கற்றலுக்காக E-Learning, கணினி மயப்படுத்தி அடுத்த சந்ததியினர் பயன் பெறவும், ஒரு கணினி மென்பொருள் உருவாக்கப்படுகிறது. இந்த உருவாக்கமானது கணினி வழி ஊடாக தமிழ் மொழிக் கற்றலில் ஓர் அங்கமாகத் திகழ்வது மட்டுமல்லாமல் பல ஆண்டுகளுக்கு எமது மொழியின் தங்கு தடையற்ற பாவனைக்கும் ஒரு பாலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

[illegible]

தமிழ்மொழியின் செழுமைக்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணை புரியும்

பழமொழிகளை அடுத்த தலைமுறையினருக்காக மின் கற்றலுக்காக கணினி மயப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஒரு நல்ல மனித சமுதாயத்தின் தோற்றத்திற்கு அவை எடுத்தியம்பும் வாழ்வியல் விழுமியங்களையும் கோடிட்டுக் காட்டுதல்.

[illegible]

மின்கற்றல் என்பது அறிவியல் வளர்ச்சியின் ஒரு வெளிப்பாடாகும். ஆற்றல் வாய்ந்த ஒரு கற்றல் முறை. இன்றைய சூழலுக்கேற்ற ஒரு புது வழி. காலத்தையும் பொருளையும் மிச்சப்படுத்தும் ஒரு நவீன கற்றல் முறை. மேலும் உலகெங்கும் பரந்துபட்டு வாழும் தமிழர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பதற்குரிய ஒரு சிறந்த வாயில். மின்கற்றலானது E-Learning என்று அழைக்கப்படுகிறது. மின்னியலின் பயன்பாடுகளைப் பயன்படுத்தி கணினியின் துணையுடன் கற்பிக்கும் கற்றல் முறையே மின்கற்றலாகும். இதனை CSCL (Computer Supported Collaborating Learning) என்றும் அழைக்கலாம். மின்கற்றலில் காணப்படும் E என்பது பொதுவாக Electronics என்பதைக் குறித்தாலும் இது Effective or Efficient or Evolving or Everywhere or Enhanced or Extended என்பனவற்றையும் சுட்டிக்காட்டும். தற்போது பொதுவாக எல்லா நாடுகளிலும் முழுக்க முழுக்க ஆசிரியரையே நம்பி செயற்பட்டுக் கொண்டு வந்த மரபுவழிக் கற்றலான ஆசிரிய மையக் கல்வி Teacher-Centred Education துடைக்கப்பட்டு பிள்ளை மையக் கல்வி Child-Centred Education நடைமுறைப் படுத்தப்படுகிறது. மேலும் பாடப் புத்தகங்களும் கரும்பலகையுமே வகுப்பறையில் இடம் பெற்ற காலம் போய் இப்போது கணினி அந்த இடத்தைப் பிடித்துவிட்டது. அதிலும் கணினியின் மிகையான பாவனையால் ஒரு மாணவன் முழுமையாகத் தானே கற்கும் நிலையாக மின்கற்றல் உருவாகியுள்ளது. மின்கற்றலை Virtual Learning என்று கூட அழைப்பர். இது கற்றலில் ஓர் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது காரணம் இந்தக் கல்வி முறையானது மாணவன் சுயமாகச் சிந்தித்தல், தன்னைத் தானே மதிப்பிடல், தன்னைத் தானே வளப்படுத்திக் கொள்ளல், குறிக்கோளுடன் செயற்படுதல், மற்றும் கற்றலை நோக்கிய இடைவிடாத ஆர்வம் போன்ற நல்ல வாய்ப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மின்கற்றலின் வரவிற்கு முன்னைய காலப் பகுதியிலே ஒரு மாணவன் புத்தகம் படித்துக் கொண்டே ஒரு பாடலைக் கேட்க விரும்பினால் இரண்டு வளங்களைப் பயன் படுத்த வேண்டியிருந்தது. ஒன்று புத்தகம் மற்றையது பாடல் ஒலிக்கும் சாதனம். ஆனால் தற்கால கணினி யுகமோ மின்கற்றல் அல்லது இணைய வழி ஊடாக பல வளங்களை அதாவது படங்கள் Visuals pictures, அசைவுப் படங்கள் Animations, படவரைபு Graphics, ஒலி Audio, மற்றும் ஒளிக்காட்சிகள் Video, என்பனவற்றை ஒன்று சேர்த்து மாணவனுக்கு உயிரோட்டமான கற்றலை வழங்குகின்றது.

[illegible]?

இந்தக் கேள்விக்கு அந்தச் சொல்லிலேயே விளக்கம் இருப்பதை நாம் காணலாம். பழைய மொழி, பழகிப்போன மொழி, பழக்கத்தில் வந்துவிட்ட மொழி மூதறிவிலிருந்து தோன்றிய மொழி, நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வரும் மொழி பழமொழி எனக் கூறலாம்.

நாம் நாள்தோறும் பேசும் வாக்கியங்கள் அவ்வப்போது எம்மால் அமைக்கப்படுவன. அவை அவ்வப்போதைய தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்துவிட்டு மறைந்து போகின்றன. எனினும் சிற்சில வாக்கியங்கள் பொருட்சிறப்பு மிக்கவையாகப் பிறந்து

மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படும் தகுதியைப் பெற்றுவிடுகின்றன. அத்தகைய வாக்கியங்களே பழமொழிகளாக நிலைக்கின்றன. பழமொழிகளை யார் எப்பொழுது இயற்றினார் என்று சொல்ல முடியாது. அவற்றிற்கு இலக்கணமோ வரையறையோ கிடையாது. மேலும் பழமொழிகளுக்கு எழுதா இலக்கியம் என்ற பெயரும் உண்டு. நம் முன்னோர்கள் அனுபவரீதியாகப் பெற்ற அறிவைக் கொண்டே பழமொழிகளைக் கூறினர். அவைகள் கற்பனை சிறிதும் கலவாத வாழ்க்கை நெறி மற்றும் இலக்கிய வடிவங்கள். அவை சமுதாயத்தின் பொதுச் சொத்து. நீதியைக் கூறி வாழ்க்கையை நேர்மைப்படுத்தும் கருத்துக்களைப் பொதித்து வைத்திருப்பதால் பழமொழிகள் காலத்தை வென்று சிறப்போடு வாழும் தன்மையைப் பெறுகின்றன. எல்லோராலும் என்றும் ஏற்கத்தக்கவையாக அவை திகழ்கின்றன. உலகில் பல்வேறு மொழிகள், இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள் உள்ளன. ஒவ்வொரு மொழியிலும் நீதி போதிக்கும் பழமொழிகள் ஏராளமாக உள்ளன. எடுத்துக்காட்டாக தமிழ் மொழியிலே கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்றொரு பழமொழி நெடுங்காலமாக தமிழர்களால் சொல்லப்பட்டு வருகின்றது. இதனுடைய கருத்தும் இலகுவாக பெரும்பாலானோர்களால் புரிந்து கொள்ளப்படுகிறது அல்லது ஊகிக்கப்படுகிறது. அதாவது கணவன் என்பவன் கல்லாக இருந்தாலும் சரி அல்லது புல்லாக இருந்தாலும் சரி ஒரு பெண்ணானவள் அவனை தனது இதயத்தில் உயரிய இடத்தில் வைத்துப் பார்க்கிறாள். ஆனால் இந்தப் பழமொழியும் சரி இதனது பொருளும் சரி மேலெழுந்தவாரியாகத்தான் இங்கே பார்க்கப்படுகிறது. காரணம் இந்தப் பழமொழியானது தனது சரியான வடிவத்தினின்று சிதைந்து காணப்படுகின்றது. இதனது ஆரம்பத் தோற்றமானது கல்லானானாலும் கணவன் புல்லனானாலும் புருசன் ஆகும். அதாவது கணவனானவன் கல்லாதவனாக (படிக்காதவனாக) இருந்தாலும் சரி அல்லது புல்லனாக (சுகதேகி இல்லாமல்) இருந்தாலும் சரி அவனை மனைவியானவள் எப்போதும் தனது இதயத்தில் உயரிய இடத்திலேயே வைக்கிறாள். இதுதான் எமது தமிழ்க் கலாச்சாரம். மேலும் பல பழமொழிகள் சிறப்புக்குரிய அம்சங்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ளன. சிந்திக்கத் தூண்டுகின்ற ஆழமான கருத்துக்களை குறுகலான வாக்கிய அமைப்பில் அவை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக வீட்டுக்கு நல்லவளை வை என்னும் பழமொழியை எடுத்துக் கொண்டால் இதிலே இரண்டு பொருள்களைக் காணலாம். ஒன்று ஒரு வீட்டிலே ஓர் ஆணுக்கு திருமண நிச்சயதார்த்தம் நடக்க இருக்கின்றபோது ஆண் வீட்டார் ஒரு நல்ல பெண்ணைத்தான் தேடுவார்கள். காரணம் வீட்டுக்கு அடி எடுத்து வைப்பவள் ஒரு நல்ல பெண்ணாக இருந்தால்தான் அந்த வீடு துலங்கும். இரண்டு வீடு ஒன்று கட்டி முடித்ததும் அதற்கு கூரை போட வேண்டும். கூரை போடுவதற்கு கட்டி முடித்த சுவர்கள் மேல் மரத்தினாலான வளை வைக்க வேண்டும். அந்த வளை நேராகச் சீராக இருந்தால்தான் கூரை திடமாகவும் எடுப்பாகவும் இருக்கும். எனவே பழமொழிகள் சுருக்கமாக இருந்தாலும் அவை புலப்படுத்தும் கருத்துக்களோ ஆழமாக இருக்கும்.

[illegible]

[illegible]


Computerization of Tamil Proverbs for E-Learning
A Learning Tool of Tamil Proverbs
© M.Somathasan & Dr.R.Saranya
பழமொழிகள்
பழமொழிகள்
ஒற்றுமையே பலம்
1. அடம்பன் கொடியும்
2. ஒன்று பட்டால் உண்
முக்கியத்துவம்
அளவை மீறல்
விடயப்புலமையின்மை
ஆராய்ந்து செய்தல்
பெரியோரும் தவறலாம்
திருப்தியற்ற மனம்
வீண் பெருமை
விடாமுயற்சி
பேராசை
உத்தம நட்பு
அவசரம் காட்டாமை
நன்றியுணர்வு
Exit

பழமொழிகள் என்பது மொழியின் செழுமையை, மண்ணின் மகிமையை, கலாசாரத்தின் பெருமையை, பண்பாட்டின் மேன்மையை, நாட்டு நடப்பின் தன்மையை, மனித வாழ்வின் இலக்கணத்தை, உலகுக்கு உணர்த்தும் ஓர் உன்னதமான உயிரியல் தத்துவ சித்தாந்தச் செல்வமாகும்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

இப் பழமொழி நமக்குப் புலப்படுத்தும் உண்மை என்ன? அடம்பன் கொடி என்பது இலகுவில் அறுக்கக் கூடிய ஓர் மிருதுவான கொடியாகும். ஆனால் இக்கொடிகள் பல சேர்ந்து ஒன்றிணைந்திருந்தால் அவற்றை அறுப்பது மிகவும் சிரமம். இதே போல் மனிதர்கள் பலர் சேர்ந்து ஒற்றுமையாக இருப்பார்களாயின் அவர்களைப் பிறர் எளிதில் வென்றுவிட முடியாது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் ஒற்றுமையாக உழைப்போரே அத்துறையில் மிளிருவர். இன்றைய உலகில் ஒருவன் தனித்து வாழ்வதென்பது சிரமமாக உள்ளது. அவன் இந்த சமூகத்திலே பலருடன் கூடி வாழவேண்டியவனாக இருக்கின்றான். தனித்து ஒரு தொழிலைச் செய்வதைக் காட்டிலும் பலருடன் சேர்ந்து செய்யும் போது அத்தொழிலை சிரமமில்லாமல் எளிமையாகவும் இலாபகரமாகவும் செய்திட முடியும். எனவே ஒற்றுமையே பலம் என்ற உண்மையை உரைக்கும் இப்பழமொழியின் உள்ளார்ந்த கருத்தினை உணர்ந்து செயற்படின் நம் வாழ்வு சிறக்கும் என்பது திண்ணம்.

[illegible] mkdurajmani@gmail.com [illegible]